# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.221/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | சாந்தி |
| Father’s Name | : | க/பெ.செல்லன் |
| Village | : | மாவல்வாடி, வந்தவாசி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 19.05.2025.

எதிரிகள் 1, 3, 4 ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் எனது கணவர் பட்டியல் சாட்சி 1 செல்லன் இறந்துவிட்டார். அவர் எதிரிகள் மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். 1ம்

எதிரி குமார் என் மகன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 6.00 மணிக்கு நான் என்வீட்டில் இருந்தபோது 1, 2, 4 எதிரிகள் மற்றும் சாந்தி என்பவர் வந்தார்கள். 1ம் எதிரி செல்லக்குமார், சந்திரசேகர், அங்கம்மாள், சாந்தி ஆகியோா் என்னை வீட்டிற்கு வெளியே இழுத்துபோட்டு அடித்தார்கள். சாந்தியை பாக்கியம் என்று அழைப்பார்கள். 2ம் எதிரி சந்திரசேகரன் எனது மகன். 3ம் எதிரி பாக்கியம் 1ம் எதிரியின் மனைவி. 4ம் எதிரி அங்கம்மாள் 2ம் எதிரியின் மனைவி. நான் எனது பெண் திருமணத்திற்காக நிலத்தை விற்று பணம் வைத்திருந்தேன் அதை எதிரிகள் கேட்டார்கள் நான் தரவில்லை என்பதால் என்னை அடித்தார்கள். என்னை அடித்தவர்களை எனது கணவர் பட்டியல் சாட்சி 1 மடக்கியபோது அவரை அடித்து கையை உடைத்துவிட்டார்கள். பின்பு வந்தவாசி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.